பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 21 சனிக்கிழமை 06.01.2024 அதிர்வு 159

## டெங்கு பற்றி அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

டெங்கு நோயைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான பொது மக்களின் அழைப்புகளுக்காக அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று அறி முகப்படுத்தப்பட்டுள்ளது என்று

04



### பொருளாதார வளர்ச்சிக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியம்

# இனம், மதம் என்ற ரீதியில் பிளவுபடத் தேவையில்லை

### யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பொருளாதார அபிவிருத்திக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

வடக்கில் யுத்தத்தால் இழந்த வருமானத்தை வடக்கிற்கு மீள வழங்குவதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மதத் தலைவர்கள் ஆற்றக்கூடிய பணிகள் அளப்பரியன என்றும் சுட்டிக்காட்டினார்.

04

# வன்முறைச் சம்பவங்கள் யாழில் மீளவும் அதிகரிப்பு

## ஜனாதிபதியின் விஜயத்தால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு ஓட்டோக்கள் வன்முறைக் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இரு வன்முறைக் கும்பல்களுக் கிடையில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் முரண்பாடு காரண மாகவே நேற்றிரவு இரண்டு ஓட் டோக்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு கோண்டாவில் ஐயப்பன் ஆல யத்துக்கு அருகில் இளைஞன் ஒருவர் மீது வன்முறைக் கும்பல் வாள்வெட் டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு, வீதியில் நின்ற ஓட்டோவையும் அடித்து உடைத்துச் சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றிருந்தது .

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி யாழில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத் தில் 24 மணிநேரமும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் வன்முறைச் சம்பவங்கள் மீளத் தலை தூக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.




# அமைச்சரின் செயலாளர் எனக் கூறி பண மோசடியில் ஈடுபட்டவர் கைது!

இஸ்ரேலில் தொழில்வாய்ப்பு பெற றுத் தருவதாக கூறி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச் சர் மனுஷ நாணயக்காரவின் செய லாளர் எனத் தெரிவித்து பண மோசடி யில் ஈடுபட்ட ஒருவர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளி னால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில் பெற்றுத்தருவதாக கூறி, காலி மற்றும் வெலிகம ஆகிய பகுதிகளில் உள்ள இருவரிடம் தலா 3 இலட்சம் ரூபா வரை பெற்றுக்கொண்டார் என்று குறித்த நபர் மீது அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் மாத்தறை நீதிவானி டம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

சந்தேகநபரிடம் இஸ்ரேலில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்காக எவரேனும் பணம் வழங்கி இருந்தால் 011 286 42 41 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியப்படுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணி யகம் அறிவித்துள்ளது.

# பஸ் - லொறி மோதி விபத்து; ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு!

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பஸ்ஸின் சாரதி யின் நித்திரை மயக்கத்தால் அதே திசையில் பயணித்த லொறியின் பின்புறம் மோதி விபத்துக்குள்ளா னதில் 42 வயதான ரஷ்யப் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸின் முன்பகுதியில் பய ணித்த வெளிநாட்டுத் தம்பதியினர் விபத்தில் காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் கணவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் கராப்பிட்டிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை பின்னதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## வவுனியாவில் பொலிஸார் பலவந்தமாகக் கைது செய்த

# காணாமல்போனோரின் உறவுகளின் தலைவி ஜெனிற்றாவை உடனடியாக விடுதலை செய்க!

## யாழ். மாவட்ட உறவுகள் கோரிக்கை

**(எஸ்.நிதர்ஷன்)**

வவுனியாவில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடிய வேளை கைது செய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தலைவி இளங்கோதை கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை விடுவியுங்கள், காண்பியுங்கள் எனக் கோரி நாம் நீண்டகாலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். அரசிடம் வேறு எதையும் நாம் கேட்கவில்லை. பணமோ அல்லது நஷ்டஈடோ நாங்கள் கேட்கவில்லை

நேற்று ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி ஜெனிற்றாவைப் பலவந்தமாக இழுத்துச் சென்று பொலிஸார் அராஜகமாகக் கைது செய்துள்ளனர்

இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஏற்கனவே ஒரு பௌத்த மதகுரு தமிழர்கள் அனைவரையும் வெட்டிக் கொல்லுவேன் என வெளிப்படையாகத் தெரிவித்தார். ஆனால், இன்றுவரை அவரைக் கைது செய்யவில்லை.

அவ்வாறானவர்களை விடுத்து ஜனநாயக ரீதியில் எமது பிள்ளைகளைக் கேட்டுப் போராடுகின்ற எங்களைக் கைது செய்கின்றமை அரசு கொடூரமான ஆட்சியைச் செய்கின்றது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, நேற்று வவுனியாவில் கைது செய்யப்பட்ட எமது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தலைவி ஜெனிற்றாவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.” - என்றார்.

# கம்பஹாவில் தனியாக வசித்த தாய் கழுத்து நெரித்துக் கொலை!

கம்பஹா மாவட்டத்தில் வீடொன்றில் தனியாக வசித்து வந்த தாயொருவர் கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கம்பஹா, பாண்டிய முல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று (05) இடம்பெற்றுள்ளது என்று கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இதன்போது 3ஆம் லேன், பாண்டிய முல்லையில் வசிக்கும் ஹேரத் முத்யன்செலவைச் சேர்ந்த 81 வயதான ஞானசெலி இந்திரா தடிகம என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை கம்பஹா தலைமையக பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இனம், மதம்...**

யாழ். மாவட்டச் செயலகத்தில் இன்று முற்பகல் யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது வடக்கு மாகாண பாதுகாப்புப் பிரிவினரின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள கோவில்கள் மற்றும் தேவாலயங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படுவதுடன், அந்த மதஸ்தலங்களை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், அனைத்து மதத் தலைவர்களும் நல்லூர் ஆலய பொறுப்பாளர்களும் விரும்பினால் நல்லூர் ஆலயத்தை விட பெரிய ஆலயத்தை அமைக்க முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குறிப்பாக மடு தேவாலயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யுத்த காலத்தில் முஸ்லிம் மக்கள் இந்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறினர் என்றும், அவர்கள் மீள்குடியேறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இனம் மற்றும் மதம் என்ற அடிப்படையில் பிளவுபட வேண்டிய அவசியமில்லை என்று வலியுறுத்திய ஜனாதிபதி, அனைத்து மக்களினதும் உரிமைகளைப் பெற்றுக் கொண்டு ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அனைத்து மதம் தொடர்பிலும் செயற்பட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், நாட்டின் சமய மற்றும் கலாசார விழுமியங்களை முன்வைத்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அநுராதபுரம் மற்றும் கண்டியை மையப்படுத்தி பௌத்த சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்புத் திட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணம் மற்றும் தெற்கு கைலாயத்தை மையப்படுத்தி இந்து சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்பு திட்டத்தை உருவாக்க எதிர்பார்த்திருப்பதாகவும், அது பற்றிய அறிக்கையை தனக்கு வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

இந்நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு இந்தச் செயற்பாடுகள் பெரும் உறுதுணையாக அமையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சமய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக வடக்கு மாகாண ஆளுநரிடம் அனைத்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தெரிவிக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

யாழ்ப்பாணம் சர்வமதக் குழு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது பரிந்துரைகளைக் கையளித்தது.

அதற்கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, எந்தவொரு மதத்துக்கும் அநீதி இழைக்காத வகையில் அனைத்து சமய திணைக்களத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மக்களினதும் மத உரிமைகளைப் பெற்று, அபிவிருத்தியின் நன்மைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தைப் பாராட்டிய மதத் தலைவர்கள், அவர் வடக்குக்குத் தொடர்ந்து விஜயம் செய்து மக்களின் தேவைகளைக் கண்டறிய எடுக்கும் நடவடிக்கைகளைக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ். நாக விகாரையின் விகாராதிபதி வண. மீகஹஜதுரே சிறிவிமல நாயக்க தேரர், நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி இன்று அதனை உரிய முறையில் நிறைவேற்றி வருவதாகத் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அனைத்து சமயத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டிய தேரர், ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் அனைவராலும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அருட் தந்தை பீ.ஜே. ஜெபரட்ணமும் இங்கு அறிவுரை வழங்கியதுடன், கடந்த காலத்தில் வளமான மாகாணமாக இருந்த வடக்கு அவசியமான அபிவிருத்தியல்ல, மீள் அபிவிருத்தியே ஆகும் என்றும் சுட்டிக்காட்டினார். யுத்தம் மற்றும் அபிவிருத்தியை விட நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது மிகவும் கடினமான பணி என்று சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டத்தைப் பாராட்டியதுடன் எதிர்காலப் பணிகளுக்குத் தனது ஆசிகளையும் வழங்கினார்.

சிவஸ்ரீ கந்தையா குருக்கள் ஜனாதிபதிக்கு ஆசீர்வாதங்களைத் தெரிவித்ததுடன், அனைத்து மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த அரசியல் உறுதிப்பாடு அவசியம் என்றும் தெரிவித்தார்.

அந்த உறுதியும் பலமும் ஜனாதிபதியிடம் இருப்பதாக சுட்டிக்காட்டிய சிவஸ்ரீகந்தையா குருக்கள், இந்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் மத நல்லிணக்கத்தைப் பாதுகாத்து புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு மதத் தலைவர்கள் தமது ஆசிகளைத் தெரிவித்தனர்.

ஆர். ஏ. ரலீம் மௌலவி உட்பட சர்வ மதத் தலைவர்கள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதி சமூக அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





**டெங்கு பற்றி அறிவித்த...**

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்புப் பிரிவால் நிறுவப்பட்ட 011-7 966 366 என்ற தொலைபேசி இலக்கமானது டெங்கு நோய்த் தொற்று மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதற்கு நிறுவப்பட்டுள்ளது.

அதன்படி சனி – ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இலங்கையில் முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் ஜல்லிக்கட்டு!

(ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன், எம்.ஏ.ஏ.அக்தார்)

**தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் சம்பூரில் இன்று (06) இடம்பெற்றுள்ளது.**

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் இது இலங்கையில் நடைபெற்றுள்ளது.

தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டைத் தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியா உட்பட பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்தின் வழிகாட்டலில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது.

இதன் போது காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்பட்டன.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வரி ஏய்க்கும் முதலைகள்

அறவிட வேண்டிய வரிகளை அறவிடாமல் கோட்டை விட்டுவிட்டு, அப்பாவி மக்கள் மீது வேறு விதத்தில் அதீத வரியைச் சுமத்தும் பெரும் துரோகத்தை மக்களுக்கு எதிராக இழைக்கின்றது அரசு.

வருமானம் தொடர்பிலும், பிற விடயங்களை ஒட்டியும் தனியாரிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பெரும் தொகைப் பணம் வரியாக அறவிடப்படாமல் நிலுவையாக நிற்கின்றது. இதனை அறவிட வக்கற்ற அரசும் அதிகாரிகளும் மக்களுக்கு விற்கப்படும் அத்தியாவசிய பொருள்கள் உட்பட்ட பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் நேரடியாக வரிகளை விதித்தும்,விதித்த வரிகளை உயர்த்தியும் அராஜகம் புரிகின்றனர்.

விற்பனை மற்றும் சேவைக் கட்டணங்களுக்கான வரி அறவீடுகளைச் செய்வது சுலபமானது என்பதால் அதனை தீவிரப்படுத்தி, மற்றைய தரப்புகள், நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானவரி போன்ற மற்ற விடயங்களில் மெத்தனமாக நடக்கின்றன அரசும் அதிகாரிகள் தரப்பும்.

இது ஒரு வகையில் அடிப்படைத் தவறு. பிழையான செயற்பாடு. அத்தோடு ஊழல், மோசடிக்கு இணங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கையும் போன்றது.

கடந்த ஆண்டின் ஜூன் மாத முடிவில் அறவிடப்பட வேண்டிய வரி நிலுவை 94 ஆயிரத்து 300 கோடி ரூபா என்றும், அதில் ஆக 3 ஆயிரத்து 700 கோடி ரூபாவை மட்டுமே உள்நாட்டு இறைவரித் திணைக்களம் திரட்டி உள்ளது என்றும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம் போன்றவை வருவாயை - வரிகளை - திரட்டுவதில் மெத்தனமாக இருக்கின்றன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

வருவாய் சேகரிப்பு முறைகள், செயல்முறைகள் போன்றவை மைய மட்டத்திலேயே சிதைக்கப்பட்டிருக்கின்றன என்றும், இந்த அமைப்புகள் வரி செலுத்தாதவர்களுக்கு சாதகமாக உள்ளன என்றும் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்களுக்கான நாடாளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்துகின்றார்.

நாட்டின் உள்நாட்டு வருவாயை ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தி மேற்கொள்வதற்காக சிங்கப்பூரில் நடைமுறையில் இருக்கும் வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் பொறிமுறையை (RAMIS) பெரும் செலவில் அரசாங்கம் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த முயற்சித்த போதிலும், அடுத்தடுத்து வந்த அரசுகள் அதில் முழுமையாக வெற்றி அடைய முடியவில்லை என்றும், அத்தகைய குறைபாடுகள் தொடர்வதிலேயே இங்கு ஆர்வமும் விருப்பமும் காட்டப்படுகின்றன என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்துவது கவனிக்கப்பட வேண்டும்.

அரசின் வருவாய் முறையை ஒழுங்குப்படுத்தி, நேர்சீர் செய்யவிடாமல் - பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றாமல் - கடமைகளை புறக்கணித்து வரும் - இத்தகைய உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக 2023 ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க லஞ்ச ஊழல் எதிர்ப்பு சட்டத்தை பிரயோகிப்பது குறித்து ஆராயப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தாமல் தவிர்ப்பதற்கு சட்டத்தில் தாராளமாக இருக்கும் ஓட்டைகளை அடைப்பது குறித்தும் ஆராயப்படுவதாக அவர் கூறுகின்றார்.,

வரி அறவீடுகளுக்கான தளத்தையும், தகவல் உள் செலுத்துகைகளையும் அரசு இப்போது விரிவு படுத்துகின்றது.அதே போன்று செலுத்தப்படாத வரிகள், அபராதங்கள், வரி ஏய்ப்புகள் குறித்தும் அரசு தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்.

விற்பனையாளும் பொருள்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகளுக்கான பெறுமதிசேர் வரி போன்றவை உடனடி அறவீடுகளுக்கும் அரசின் வருமான அதிகரிப்புக்கும் இலகுவாக உதவக் கூடும். ஆனால் அவை நாட்டின் சாமன்ய மக்களை நேரடியாக பாதிக்கும் விடயங்கள். அவர்களின் பொக்கற்றுக்களைச் சுரண்டும் செயற்பாடுகள்.

ஆனால் அரசுக்கு உரிய வருவாயைச் செலுத்தாமல் ஏய்க்கும் தந்திரம் பெரும் பண முதலைகளின், முதலாளிகளின், நிறுவனங்களின் வெற்றிகரமான செயற்பாடாகும். அதற்குத் தாராளமாக இடமளித்து விட்டு, நாட்டினதும் அரசினதும் வருமானத்துக்காக சாமானிய மக்களின் அடிவயிற்றில் கை வைப்பது மிகப்பெரிய துரோகமாகும்.

# ஜனாதிபதியின் ஏமாற்று வேலைகளை நம்பத் தமிழர்கள் முட்டாள்கள் அல்லர்!

## கஜேந்திரகுமார் எம்.பி. திருகோணமலையில் இன்று தெரிவிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

யாழ்ப்பாணத்து மக்களுக்குக் காலங் காலமாகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கித் தமிழர்களை ஏமாற்றுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின் பொய்யான ஏமாற்று வேலை களை நம்புவதற்கு தமிழர்கள் முட் டாள்கள் அல்லர்.

தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான கஜேந்திர குமார் பொன்னம்பலம் திருகோணமலை மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை இன்று (06) பகல் 1.30 மணியளவில் சந்தித்தார்.

புதிதாக கொண்டு வரப்படவிருக்கும் மீனவர் சட்ட மூலம் தொடர்பாக கலந்து ரையாடலை மீனவர்களுடன் மேற் கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்



ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ். விஜயத்தின் போது, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துரைக்க வில்லை. 13 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் சகல அதிகாரங்களும் மாகாண சபைக்கு இருக்கின்றன. ஆனால் அவர் மாகாண சபை தேர்தலை நடத்த முற்படவில்லை.

காலங் காலமாக யாழ்ப்பாணத்துக்கு வரும் சந்தர்ப்பங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தமிழர்களை ஏமாற்றுகின்றார்.

இது போன்று பல தடவைகள் ஏமாற்று வேலைகளை செய்துள்ளார். இம் முறையும் ஏமாற்று வேலையில் ஈடுபட்டுள்ளார்.ஆனால் இவருடைய பொய்யான ஏமாற்று வேலைகளை நம்புவதற்கு தமிழர்கள் முட்டாள்கள் இல்லை.- என்றார்.

# வாள்கள், போதைப் பொருள்களுடன் புதுக்குடியிருப்பில் இளைஞன் கைது!





புதுக்குடியிருப்பு, விசுவமடு பகுதி யில் வாள்கள் மற்றும் போதைப் பொருள்களுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வாள்கள், கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருள்களை உடமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 29 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ் வாறு புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று (05) மாலை கைது செய்யப்பட் டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். கேரத்துக் குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து விசுவமடு பகுதியில் புதுக்குடியி ருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். கேரத் தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான பதும் ரத்னாயக்க, ஜெயசூரிய, பிரதீபன், ஆகியோரால் விசேட சோதனை நடத் தப்பட்டது.

இதன்போது 4 பைக்கற்றுக்களில் 20 கிராம் கஞ்சா போதைப் பொருள், 600 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருள், இரண்டு வாள்கள் என்பன அந்த இளைஞனிடம் இருந்து மீட்கப்பட்டன. அத்துடன் இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபரை முல்லைத்தீவு நீதி மன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸ ார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காரைதீவில் கப்டன் விஜயகாந்துக்கு நாளை ஆத்மசாந்திப் பிரார்த்தனை!

(வி.ரி.சகாதேவராஜா)

மறைந்த பிரபல நடிகரும் தமிழ் உணர்வாளருமான புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்திற்கு காரைதீவில் நாளை (07) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 11 மணியளவில் ஆத்மசாந்தி பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவுக் கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் காரைதீவு பொது நூலக மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தாயக மக்களின் கதாநாயகனும் ஈழ தேசத்தின் விடுதலைக்காக அளப் பெரிய சேவைகளை வழங்கிய கொடை வள்ளலுமான விஜயகாந்த் அவர்களு டைய ஆத்மா சாந்தி பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளரான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.



# அஞ்சல் நிர்வாகத்துறை மட்டக்களப்பில் திறப்பு!

**(பழுவூரான்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் வழிகாட்டலின் கீழ் அஞ்சல் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட அஞ்சல் நிர்வாகத் தொகுதி இன்று சனிக்கிழமை (06) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், இரா ஜாங்க அமைச்சர் எஸ்.வியாளேந்திரன், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் அஞ்சல் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்ஸாமிய ஆன்மீகத் தலைவர்களும் பிரசன்னமாயிருந்தனர்.











# வரி அதிகரிப்பால் அதிகம் பாதிக்கப்படுவோர் சிறார்களே!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு




நாட்டில் வரிச்சுமையால் சிறார்கள் தலைமுறையே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. நேரத்தில், அவர்களுக்கு தேவைப்படும் ஊட்டச்சத்து, கவனிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்க முடியாதுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 60 ஆவது கட்டமாக கம்பஹா, வெரகொடமுல்ல மகா வித்தியாலயத்துக்குப் 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (05) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், சாமானிய மக்களின் நிதியங்கள் மற்றும் சேமிப்புகள் மீதே அதிக சுமை சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் பெரும் செல்வந்தர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இன்று நாட்டில் பெரும் செல்வந்தர்களைப் பாதுகாக்கும் அரசே உள்ளது. சாதாரண மக்களைப் பாதுகாக்கும் அரசு ஆட்சியில் இல்லை.

குடும்பங்களின் வருமானம் குறைந்து 91 வீதம் செலவுகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் மனிதாபிமானமற்ற முறையில் வற்வரியை அதிகரித்து மக்களின் வாழ்க்கையை இந்த அரசு அழித்து வருகிறது. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங் கப்படும் போஷாக்கான உணவுகளுக்குக் கூட வரி விதிக்கப்பட்டுள்ளது. இது வெட்கமற்ற மனிதாபிமானமற்ற செயல். - என்றார்.



# யாழ். நகர் பகுதியில் டெங்கு நடவடிக்கை!

யாழ். நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட கொட்டடி கிராமத்தில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று (05) வெள்ளிக்கிழமை யாழ். நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து கொட்டடி பகுதியில் வீடுகளில் விசேட டெங்கு தரிசிப்புகளை மேற்கொண்டனர்.

இதன்போது 80 இற்கும் மேற்பட்ட வீடுகள் தரிசிப்பு செய்யப்பட்டன. டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகக் காணிகளை வைத்திருந்த 12 பேருக்கு எதிராகச் சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் வீட்டு வளவுகளில் டெங்கு நுளம்புக் குடம்பிகளை வைத்திருந்த 08 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# வாகரை கயங்கேணியில் மினி சூறாவளி; 6 மீன்பிடி படகுகள், இயந்திரங்கள் சேதம்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (5) இரவு வீசிய மினி சூறாவளியால் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் தூக்கி வீசப்பட்டதையடுத்து 6 படகுகள் இயந்திரங்கள் சேதமடைந் துள்ளன என்று வாகரை பிரதேச செய லாளர் க.அருணன் தெரிவித்தார்.

வாகரை காயங்கேணி கடற்கரையில் மீனவர்கள் மீன்பிடி இயந்திர படகுகளை நிறுத்தி வைத்திருந்த நிலையில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் சீரற்ற கால நிலையால் பெய்துவந்த கடும் மழையால் ஏற்பட்ட ஆற்று வெள்ளம் காரணமாகக் கல்லரிப்புப் பிரதேசத் துக்கான போக்குவரத்துத் துண்டிக்கப் பட்டது.

இந்த நிலையில் அந்த பிரதேசத்துக்கு உழவு இயந்திரம் மற்றும் படகு சேவை கள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டு இடம்பெயர்ந்த 22 குடும்பங்கள் தொடர்ந்தும் கதிரவெளி கனிஷ்ட வித்தி யாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் ஆறு மாணவர்களுக்குச் சைக்கிள்கள்







சந்நிதியான் ஆச்சிரம இந்த வார நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது. வாராந்த நிகழ்வில் பண்ணிசை விருந்தும், 06 மாணவர்களுக்குச் சைக்கிள் வழங்கலும் இடம்பெற்றது.

பண்ணிசை விருந்தாக, சி.தில் லைமணியின் பாடல்கள் இடம் பெற்றன. வயலின் – ஸ்ருதிவேந்தன் அ. ஜெயராமன், மிருதங்கம் – திரு. சிவகுமார்.

06 மாணவர்களுக்கு 2 லட்சத்து 82 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தில் தரம் – 06 இல் கல்வி கற்கும் மாண வன், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியில் தரம்– 07 இல் கல்வி கற்கும் மாணவி, சுழிபுரம் விக்ரோ றியாக் கல்லூரியில் தரம் – 11 இல் கல்வி கற்கும் மாணவன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் – 08 இல் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கே சைக்கிள் கள் வழங்கப்பட்டன.

செயற்றிட்ட உதவிகள் வாராந்த நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிக ளால் வழங்கப்பட்டது.



# கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

"வரலாற்று விழுதுகள்" அமைப்பின் வருட இறுதி ஒன்று கூடலும், அதி கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்கள் வழங்கலும் அண்மைய் இடம்பெற்றன.

"வரலாற்று விழுதுகள் "அமைப்பால் வறுமையை ஒழித்து கற்றலுக்கு உதவும் திட்டத்தின் அடிப்படையில் அமைப்பின் தலைவர் தவலிங்கம் ஐங்கரன் தலைமையில் மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அதி கஷ்டப் பிரதேச பாடசாலையான 39 ஆம் கிராமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் திருவருள், ஆசிரியர்கள், மாணவர்கள், அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# தென்மராட்சியில் 50 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன

(த.சுபேசன்)

சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக் குமாரசுவாமியின் அனைவரையும் பொங்க வைப்போம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த புதன்கிழமை தென்மராட்சி பகுதியில் 50 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வசாவிளான் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, கைதடி, நுணாவில் பகுதியில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கே தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கனடாவில் வசிக்கும் சமூக சேவகர் ரஜீவ் சுப்பிரமணியம் என்பவருடைய நிதிப் பங்களிப்பில் கலாநிதி அகிலன் முத்துக் குமாரசுவாமி ஊடாக இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக 10 வருடங்கள் அனைவரையும் பொங்க வைப்போம் எனும் திட்டத்தின் கீழ் பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் சபையின் 50 ஆவது கூட்டம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபைப் பணிபாளர் சபையின் 50 ஆவது கூட்டம் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைசரின் செயலாளர், கிழக்கு மாகாண திட்டமிடலுக்கான பிரதிப் பிரதம செயலாளர், கிழக்கு மாகாண நிதிக்கான பிரதிப் பிரதமர் செயலாளர், கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உட்பட சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



வீடமைப்பு அதிகார சபையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. பல முக்கிய தீர்மானங்களும் எட்டப்பட்டன.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் சேவைகளை ஜனரஞ்சகப்படுத்தி மிகப் பெரிய வருமானம் ஈட்டும் நிறுவனமாக மாற்றி அமைப்பதற்கான பல்வேறு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு ஏக மனதாக பணிப்பாளர் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



# சாய்ந்தமருது ஆஸ்பத்திரி ஊழியருக்குப் பாராட்டு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் வருடாந்த நிறுவன ரீதியிலான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பாராட்டு விழா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எம்.அஜ்வத் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஸக்கீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வில் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் தாதி உத்தியோஸ்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



# சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலய பரிசளிப்பு விழா

(எம்.ஏ.ஏ.அக்தார் )

மட்டக்களப்பு, சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் சி.சுரேஸ்குமார் தலைமையில் இடம் பெற்றது.

பாடசாலையும் சமூகமும் இணைந்து நடத்திய இந்த விழாவில் பிரதம அதிதியாக வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாளேந்திரனும், கௌரவ அதிதிகளாகவலயக்கல்விபணிப்பாளர்களான தி. ரவி , த.அனந்தரூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சமய குருமார்கள், கல்வி அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் , பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றார்கள் எனப் பலர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர்.

10 வருடங்களுக்கு பிறகு நடைபெறும் இந்தப் பரிசளிப்பு விழாவில் சகல துறைகளிலும் பிரகாசித்த 220 இற்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் 08 பேர் சாதாரண பரீட்சையில் அதிக மான உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், விளையாட்டு , அழகியல் உள்ளிட்ட பல்வேறு இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.





# சின்னமுத்து நோய்த் தடுப்பூசி நாடு முழுவதும் போடப்பட்டது!


(எஸ். நிதர்ஷன்)

நாடளாவிய ரீதியல் ஒன்பது மாவட்டங்களிலும் சின்னமுத்து நோய் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு இன்று முன்னெடுக்கப்பட்டது.

சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு யாழ்ப்பாணம் மாநக ரசபை யூபிலி சுகாதார மகப்பேற்று நிலையத்தில் இன்று காலை ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்தச் செயற்பாடு யாழில் அனைத்து சுகாதார சேவைகள் நிலையத்திலும் இடம்பெற்றன.



# உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லை; மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை ரொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயர் தரக் கற்கை நெறிகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் மாணவர்களது எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருகோணமலை மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல வருட காலமாக இந்தப் பாடசாலையில் நிலவிவரும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்த போதிலும் இது தொடர்பாக அரச மட்டத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த விடயம் தொடர்பில் முறையிட தாம் முடிவு செய்துள் ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு உயர்தர கலை பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையால் 50 வீதமான மாணவர்களே சித்தியடைந்தனர்.

அதனை தொடர்ந்து கடந்த காலங்களில் இந்தப் பாடசாலையில் உயர்தரம் நடத்தப்படவில்லை இதற்கு ஆசிரியர் பற்றாக்குறையும் வளப்பற்றாக் குறையுமே காரணமாகும்.



ஆனாலும் 2022 ஆம் ஆண்டு வெளியான சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் மாணவர் கள் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கு விருப்பம் தெரிவித்தாலும் போதிய ஆசிரியர்கள் இன்மையால் அவர்க ளால் இந்தப் பாடசாலையில் உயர்தரத்தினை தொடர முடியாதுள்ளது.

இதனால் மாணவர்கள் வெளிப் பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்கும் நிலை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த முறையும் 2023 ஆம் ஆண்டு வெளியான சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மாணவர்கள் இங்கு உயர்தரம் கற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், பெற்றோரின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு பாடசாலைக்கு ஆசிரியர்களை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பாலமுனை கடற்கரையில் சிரமதானம்

(எம்.எப்.நவாஸ்)

241 அக்கரைப்பற்று நீதா படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இன்று பாலமுனையில் இருந்து அட்டாளைச் சேனைவரை கடற்கரையைச் சுத்தம் செய்தனர்.

இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர், கிராம உத்தியோத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர் மற்றும் இளைஞர்கள், மீனவர்கள் பங்குபற்றினர்.





# மனித பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிக்கப்பட்டன!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பில் விதியோர வியாபாரிகளிடமிருந்து மனித பாவனைக்கு உதவாத பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் முற்றுகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகர் மற்றும் கல்லடி பிரதேசங்களில் வீதியோர அங்காடி வியாபார நிலையங்களை பொது சுகாதார பரிசோதகர்கள் சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத வாழைப்பழம், தோடம் பழம், கரட், இனிப்பு பண்டமான பூந்தி ஆகியவற்றை விற்பனை செய்த 7 வியாபாரிகளின் பொருள்கள் அழிக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணனின் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் இந்த திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை கல்லடி பொதுச் சந்தைத் தொகுதி, கல்லடி, திருகோணமலை வீதி ஆகியவற்றிலும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



# சித்திரக் கண்காட்சியும் பரிசளிப்பும்


(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனநாயக இளைஞர் கல்வி கூடத்தின் பீஸ் நெற் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் சித்திரக் கண்காட்சியும், சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் அண்மையில் காரைதீவு லேடி லங்கா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரமவும்,கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசன் ,காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# 15 இந்திய மாலுமிகள் சோமாலியாவில் மீட்பு





சோமாலியா அருகே இந்திய மாலுமிகள் 15 பேருடன் கடத்தப்பட்ட 'எம்.வி லீலா நார்போக்' சரக்கு கப்பலை, இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். சென்னை போர்க்கப்பலின் கொமாண்டோக்கள் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு மீட்டனர்.

இந்த நிலையில், கப்பலில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்ட இந்தியர்கள் "பாரத் மாதா கி ஜெய்" என்று கோஷமிட்டு, இந்திய கடற்படைக்கு தங்களது நன்றியை தெரிவித்துள்ளனர். இது தொடர்பான வீடியோ சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

மத்திய ஆரிக்காவைச் சேர்ந்த சோமாலியா அருகே 15 இந்தியர்களுடன் சென்று கொண்டிருந்த சரக்கு கப்பல் நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்டது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

லைபீரியா நாட்டு கொடியுடன் கப்பல் சென்றதால், இந்திய மாலுமிகள் கடத்தப்பட்டனர் என தகவல் வெளியானது. அரபிக்கடல் பகுதியில் சோமாலியா கடற்கரை அருகே 300 நாட்டிக்கல் மைல் தொலைவில் சரக்கு கப்பல் சென்றபோது, விரைவுப் படகில் ஆயுதங்களுடன் சென்ற 6 கொள்ளையர்கள் கப்பலுக்குள் ஏறி கடத்தலில் ஈடுபட்டனர். அந்த கப்பலில் இந்திய மாலுமிகள் 15 பேர் உட்பட 21 பேர் இருந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள லைபீரியா நாட்டில் பதிவு செய்யப்பட்ட லைலா நார்போல்க் என்ற கப்பலை மீட்க சென்னை ஐ.என்.எஸ். போர்க்கப்பலை இந்திய கடற்படை அனுப்பியது.

கடத்தப்பட்ட சரக்குக் கப்பல் இருக்கும் இடத்தை நோக்கி இந்திய கடற்படை விமானமும் உடனடியாக அனுப்பப்பட்டது. இதையடுத்து, கடத்தப்பட்ட கப்பலுடன் தொடர்பை ஏற்படுத்தி, பணியாளர்களின் பாதுகாப்பை இந்திய கடற்படை உறுதி செய்த நிலையில், அரபிக்கடலில் இந்திய மாலுமிகள் 15 பேருடன் கடத்தப்பட்ட 'எம்.வி லீலா நார்போக்' சரக்கு கப்பலை, இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் சென்னை போர்க்கப்பலின் கொமாண்டோக்கள் மீட்டனர்.

அந்த கப்பலில் இந்திய மாலுமிகள் 15 பேர் உட்பட 21 பேர் நலமுடன் இருகின்றனர் என கூறப்படுகிறது. இந்நிலையில், மீட்கப்பட்ட இந்தியர்கள் "பாரத் மாதா கி ஜெய்" என்று கோஷமிட்டு, இந்திய கடற்படைக்கு தங்களது நன்றியை தெரிவித்துள்ளனர். இது தொடர்பான வீடியோ சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இந்திய இணையவாசிகள் கடற்படையின் செயலுக்கு தங்களது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். இந்திய கடற்படை செய்தித் தொடர்பாளர் கொமாண்டர் விவேக் மத்வால் இது குறித்து கூறுகையில்,

"கடற்கொள்ளையர்கள் சரக்கு கப்பலில் ஏறியபோது, அனைத்து பணியாளர்களும் கப்பலில் உள்ள பாதுகாப்பான அறையில் மறைந்தனர்.

தற்போது கப்பலில் இருந்த 15 இந்தியர்கள் உட்பட 21 பணியா ளர்களும் பாதுகாப்பாக வெளி யேற்றப்பட்டனர்.

பணிநிறுத்தப்பட்ட போர்க்கப்பலில் இந்திய கடற்படையின் கொமாண்டோக்கள் வணிகக் கப்பலில் ஏறி சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்" என்று கூறினார்.

அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான கப்பல்கள் குறித்து விசாரணை நடத்தி வருவதாக இந்திய கடற்படையினர் தெரிவித்துள்ளனர். மீட்புக்காட்சிகள் தொடர்பான காணொலிகளை இந்திய கடற்படை வெளியிட்டுள்ளது.

# இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 21 பேர் தாயகம் திரும்பினர்

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 21 பேர் நேற்று தாயகம் திரும்பினர்.

கடந்த டிசம்பர் 6 ஆம் திகதி இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடலுக்குச் சென்ற உயிர்தராஜ் என்பவரது விசைப்படகையும், அதில் பயணித்த 8 மீனவர்களையும் தலைமன்னார் அருகே இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள், வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதேபோல, புதுக்கோட்டைமாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து 2 விசைப் படகுகளில் கடலுக்குச்சென்ற 9 மீனவர்கள் மற்றும் ஜெகதாப்பட்டினத்திலிருந்து ஒரு விசைப்படகில் கடலுக்குச் சென்ற 4 மீனவர்கள் என 13 மீனவர்களை நெடுந்தீவு அருகே கைது செய்த இலங்கை கடற்படையினர், யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.



இந்த நிலையில், கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தால் இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரும், கடந்த டிசம்பர் 21 ஆம் திகதிபுதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 13 பேரும் ஊர்காவல் துறை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையான 21 மீனவர்களும் நேற்று பிற்பகல் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்னை விமான நிலையம் சென்றடைந்தனர்.

தொடர்ந்து, சென்னையில் இருந்து மீனவர்கள் 8 பேர் இராமேஸ்வரத்துக்கும், 13 மீனவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்துக்கும் தனித்தனி வாகனங்களில் தமிழக மீன்வளத் துறை அதிகாரிகள் மூலம் நேற்றிரவு அழைத்து செல்லப்பட்டனர்.

# காஸா பொதுமக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற பகுதியாக மாறிவிட்டது!

## – ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு






பொதுமக்கள் வாழ்வதற்கு தகுதியற்றதாக காஸா பகுதி மாறிவிட்டது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண உதவிகளுக்கான தலைவர் மார்டின் கிரிஃபித்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸா பகுதியிலுள்ள மக்கள் உணவுக்காகவும் குடிநீருக்காகவும் தொடர்ந்தும் போராடி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் – காஸா மோதல் காரணமாக நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கின்றனர்.

அத்துடன், தங்களது இருப்பிடங்களை இழந்துள்ளனர். இது கவலையளிக்கின்றது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், தொற்று நோய்கள் அதிகளவில் பரவி வருவதுடன், மருந்து பொருள்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதத்துவத்தின் மிக மோசமான நிலையை காஸா சந்தித்துள்ளது. இந்த நிலையில் உடனடி போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண உதவிகளுக்கான தலைவர் மார்டின் கிரிஃபித்ஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உக்ரைன் இராணுவம் எறிகணை தாக்குதல்: பொதுமக்களை வெளியேற்றும் ரஷ்யா



உக்ரைன் இராணுவம் நடத்திய எறிகணை தாக்குதல்களை அடுத்து, பெல்கொரோட் நகரில் வசிக்கும் மக்களை ரஷ்யா வெளியேற்றத் தொடங்கியுள்ளது.

உக்ரைனிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பெல்கொரோட் நகரம் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த நகரம் மீது உக்ரைன் நடத்திய தாக்குதல்களில் 25 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல்களில் 39 பேர் கொல்லப்பட்டனர். 160 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பெப்ரவரி 2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போரை அடுத்து ரஷ்ய குடிமக்களுக்கு எதிரான மிக மோசமாக உக்ரைன் நடத்திய தாக்குதல் இது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 5.1 ஆகப் பதிவு

தஜிகிஸ்தானில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.1 ஆக பதிவாகியுள்ளது என தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

தேசிய நிலநடுக்கவியல் மையம் அளித்த தகவலின்படி, தஜிகிஸ்தானில் சனிக்கிழமை காலை 6:42 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் ஆழம் 80 கிலோ மீற்றராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தபோதும் இதுவரை, உயிர் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை எனத் தெரிவித்துள்ளது.



# நாட்டில் வரி அதிகரிப்புக்கு எதிராக மக்கள் போராடும் நாள் விரைவில்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவிப்பு

நாட்டில் வற் வரி அதிகரிக்கப்பட் டுள்ளதால் மக்கள் மீண்டும் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளனர். அந்த நாள் விரைவில் வரும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் இவ்வாறு எச்சரிக்கை விடுத் துள்ளார்.

மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நேற்று (05) குமார் பொன்னம்பலத்தின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

சிங்கள தேசத்தவர்கள், தமிழ் மக்களது போராட்டம் ஒரு பயங்கரவாத போராட்டம் என்று இந்த உலகத்துக்கு தெரிவித்து வந்த காலப் பகுதியிலே தமிழ் மக்களுடைய ஆயுத போராட்டம் நியாயமான போராட்டம் என்று குமார் பொன்னம்பலம் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தியவர். இந்த நிலையில் 2000 ஆம் ஆண்டு சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்திலேயே அவர் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டார்.

வடக்கு - கிழக்கில் இளைஞர் யுவதி கள் சிங்கள பௌத்த தேசியவாதத்தால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு கைது செய்து சிறைகளிலே அடைக்கப்பட் டார்கள். ஏன் படுகொலையும் செய்யப் பட்டார்கள். சிலர் எவ்விதமான ஆதா ரங்களும் இன்றி பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல இளைஞர் களை நீதிமன்றில் வாதாடி குமார் பொன்னம்பலம் மீட்டெடுத்தார்.




இன்று அவருடைய மகன் கஜேந்திர குமார் அதே நேர்மையுடனும் தமிழ் தேசிய உணர்வுடனும் தமிழ் மக்களுக் காகச் செயற்பட்டு வருகின்றார்.

கஜேந்திரகுமார் அணியைச் சேர்ந்த நாங்கள் அவரது வழிகாட்டலில், தமிழ் மக்களுக்கு எங்கே அநீதி அநியாயம் நடக்கின்றதோ அங்கு சென்று அதனை ஆராய்ந்து பிரச்சினையை உலகத் துக்குத் தெரியப்படுத்தி வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்திலே எம் மக்க ளது ஏராளமான காணிகள் அபகரிக் கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் தமிழர்கள் இலங்கையில் இருக்க முடியாத சூழ்நிலையை சிங்கள பௌத்த தேசிய வாதம் ஏற்படுத்துகின்றது என்பதை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆணித்தரமாக உலகுக்குத் தெரியப்ப டுத்தி வருகின்றது.

தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கும் சரியான தலைமைத்துவத்தின் குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும்.

இதே நிலையில், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உறுதியான தலைமைத்து வத்தின் வழியிலே பெரும்பாலனவர்கள் நாடாளுமன்றில் இருப்பார்களாயின் உலகம் இந்தத் தலைமைத்துவத்தின் கதையைத்தான் கேட்கும். அந்த இடத் தைத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அடையும். அடுத்த தேர்தலில் வடக்கு கிழக்கில் ஆகக்கூடிய ஆசனங்களை எமது கட்சி பெறும்.

நாடு வறுமைக் கோட்டு நிலையில் போய் கொண்டிருக்கும் வேளை மக்கள் அந்த நிலையைத் தாக்குப் பிடிக்க முடியாது. குறிப்பிட்ட வருமானத்துக்குள் வாழ்கையை கொண்டு நடத்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

இதில் புதிதாக 18 வீதமாக வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ அரசை மக்கள் எவ்வாறு துரத்தியடித்தார்களோ அவ்வாறு வற் வரி விதிப்புக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்.- என்றார்.